(19)
LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2009/2010 (ஆகஸ்ட்/செப்ரம்பர் 2011)

## EDU/S 3102 மாணவர் பொருத்தப்பாடும் முன்பள்ளிக் கல்வியும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) கற்றலில் மாணவர் பொருத்தப்பாட்டின் முக்கியத்துவம் பற்றிக் கருத்துரைக்க.
(07 புள்ளிகள்)

(ஆ) பாடசாலையில் மாணவரிடத்தே பொருத்தப்பாடற்ற தன்மையை ஏற்படுத்தும் காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க.
(08 புள்ளிகள்)

(இ) நெறிப்பிறழ்வுக்கான காரணங்களைச் சிக்மன் புரோய்டின் கருத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.
(10 புள்ளிகள்)

02.(அ) பிழையான சீராக்கம் பெற்ற மாணவர்களைக் கற்றல் செயற்பாடுகளில் மேம்படுத்த ஓர் ஆசிரியர் வகுப்பறையில் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை ஆராய்க.
(10 புள்ளிகள்)

(ஆ) பிழையான சீராக்கப் பண்புகளைப் பெற்றுக்கொள்வதில் பரம்பரைச் சூழல் என்பனவற்றின் சொல்லாக்கினை ஆராய்க.
(09 புள்ளிகள்)

(இ) "பரிகாரக் கற்பித்தல்" என்பதன்மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(06 புள்ளிகள்)

03.(அ) வழிகாட்டல், ஆலோசனை என்பனவற்றிற்கு அறிஞர்கள் கூறும் கருத்துக்களை நடைமுறை உலகுடன் தொடர்புபடுத்தி விளக்குக.
(09 புள்ளிகள்)

(ஆ) வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை மேற்கொள்ளும் ஓர் ஆசிரியர் பின்பற்ற வேண்டிய ஒழுக்கக் கோவையைப் பட்டியறப்படுத்துக.
(09 புள்ளிகள்)

(இ) பாடசாலை மட்ட வழிகாட்டல் ஆலோசனைச் சேவையில் அதிபர், ஆசிரியரின் கடமைகளை விளக்குக.
(07 புள்ளிகள்)

LIBRARY
12 OCT 20

04.(அ) ஆலோசனைச் சேவைக்கான தகவல்களைச் சேகரிப்பதில் பின்பற்றப்படும் சோதனை அல்லது நுட்ப முறைகள் பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க.

(09 புள்ளிகள்)

(ஆ) இன்றைய சிரேஷ்ட இடைநிலை மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டல் சேவை ஏன் அவசியமானது என்பது பற்றி ஆராய்க.

(08 புள்ளிகள்)

(இ) வகுப்பறையில் எவ்வகையான மாணவர்களுக்கு விஷேட வழிகாட்டல் சேவை தேவைப்படுகின்றது என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கான விளக்கத்தை வழிகாட்டலுடன் தொடர்புபடுத்திக் கருத்துரைக்க.

(25 புள்ளிகள்)

(i) மிகத்திறன் மாணவர்களும் மெல்லக் கற்கும் மாணவர்களும்.
(ii) உளவழிகாட்டலும் தொழில்வழிகாட்டலும்
(iii) கார்ல் ஹொஜசின் தனியாள்மைய ஆலோசனைக் கொள்கை
(iv) சிக்மண்ட் புரொய்டின் உளப்பகுப்பு ஆலோசனைக்கொள்கை
(v) மாணவர் பொருத்தப்பாடும் பொருத்தப்பாடின்மையும்

06. (அ) குழந்தைகளின் அழகியல் திறன்கள், படைப்பாற்றல் உடல் தேர்ச்சி என்பனவற்றை விருத்தியாக்குவதற்கு மரியா மொன்டிசோரி மற்றும் மக்மிலனது கருத்துக்கள் இன்றைய முன்பள்ளிகளில் எந்தளவிற்கு நடைமுறையில் உள்ளன என்பதை மதிப்பிடுக.

(09 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை? அவற்றைத் தீர்ப்பதற்கு நீர் கூறும் ஆலோசனைகள் யாவை?

(08 புள்ளிகள்)

(இ) "முன்பள்ளிக் கல்வியில் பெற்றோரும் பங்குதாரர்கள் ஆவர்." இக்கூற்றை நுணுகி ஆராய்க.

(08 புள்ளிகள்)

*******